
# தூய வின்சென்ற் டி போல் சபை

## மத்திய சபை

## யாழ்ப்பாணம் மறை மாவட்டம்



"ஏழைகளை இறைவனின் மக்கள் என்ற மனப்பான்மையுடன் அணுக வேண்டும்"

-தூய வின்சென்ற் டி போல்-

**01/01/2011 தொடக்கம் 31/12/2011**

வரையான

# செயற்பாட்டறிக்கை

**ஆன்ம ஆலோசகர் :- அருட்பணி R.H. சகாயநாயகம்**

**செயற்குழு உறுப்பினர்கள்**

- தலைவர் :- சகோதரன் இ.அ. அமலரட்ணம்
- உபதலைவர் :- சகோதரன் சி. செலஸ்ரீன்
- செயலாளர் :- சகோதரி ஜோசேப்பின் சர்வநாதன்
- உப செயலாளர் :- சகோதரி டெய்சி தவராசா
- பொருளாளர் :- சகோதரன் எஸ். ஜெயக்குமார்
- கணக்காய்வாளர் :- சகோதரன் பி.பி. பிறின்ஸ்

**உறுப்பினர்கள்**

- சகோதரன் பெ. இ. அகிலநாயகம்
- சகோதரன் ம. இயேசுரட்ணம்
- சகோதரன் ஜோசப் குணசிங்கம்
- சகோதரன் செ. தோமஸ்
- சகோதரன் ச.ஜீ. யேசுதாசன்
- சகோதரன் எலியாஸ் அன்ரன்
- சகோதரன் சி. இராசநாயகம்
- சகோதரன் அ.அ. ஜெயரட்ணம்
- சகோதரன் அருள் ஞானமணி
- சகோதரன் அ வின்சென்ற் பெனற்
- சகோதரி ரோஸ்மேரி சேவியர்
- சகோதரி அஞ்சலா பேர்மினஸ்
- சகோதரி ராஜபுத்திரி குணசேகரம்
- சகோதரி ஜெயராணி யேசுதாசன்
- சகோதரி மு பிலோமினம்மா

# தூய வின்சென்ற் டி போல் சபை
# மத்திய சபை
# யாழ்ப்பாணம் மறை மாவட்டம்
## 01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரையான
## செயற்பாட்டறிக்கை

**“ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே கையேந்தி நிற்போரை காத்திருக்க வைக்காதே ”**

**(சீராக் 4:1)**

மேற்படி இறைவார்த்தையின் பால் கவரப்பட்டு அருளாளர் பிரெட்றிக் ஒசானம் அவர்களால் 1833ல் பிரான்ஸ் நாட்டு தலை நகரான பாரிஸ் மாநகரில் பல்கலைக்கழக மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட புனித வின்செனற் டி போல் சபையானது உலகளாவிய ரீதியில் 178 வருடங்களைக் கடந்தும் சிறப்பாகப் பணிபுரிந்து வருவதைக் காணும் போது இச் சபையின் செயற்பாடுகளில் இறை பிரசன்னமும் பராமரிப்பும் கூட இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஏழைகளின் துயர்களைக் களைந்து அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கோடு இச்சபையினை ஆரம்பித்த அருளாளர் பிரெட்ரிக் ஓசானம் அவர்களின் உள்ளத்தில் தூண்டுதலைக் கொடுத்த இறைவனுக்கு நன்றியோடு புகழ் பாடுகின்ற அதே நேரம் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தி மகிமைப்படுத்த வேண்டும் என்று இறைவனை தொடர்ந்து மன்றாடுவோம்.

### யாழ் மறைமாவட்ட மத்தியசபை

யாழ் மறை மாவட்டத்தில் மத்தியசபை ஆரம்பிக்கப்பட்டு 29 ஆண்டுகளைக் கடந்த நிலையில் சேவையாற்றி வருகின்றது. யாழ் மறைமாவட்டத்தில் முதல் பந்தி ஆரம்பிக்கப்பட்டு 106 வருடங்களைக் கடந்த நிலையில் 20 பந்திகள் பல்வேறு பங்குகளில் ஆன்மீக பிறரன்பு பணிகளை ஆற்றி வருகின்றன.

இப் பந்திகளுக்கு சிறப்பான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவரும் மத்திய சபையின் 2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டறிக்கையை சமர்ப்பிப்பதில் நாம் பெருமையும் பெருமகிழ்வும் கொள்கின்றோம்.

யாழ் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் வின்சென்ற் டி போல் சபையை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கோடு மத்திய சபை செயலாற்றி வருவதுடன் இயங்காத பந்திகளை இயங்க வைப்பதற்கு தேவையான நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது.

**ஆன்ம ஆலோசகர்:**

யாழ் மறை மாவட்ட மத்திய சபையின் ஆன்ம ஆலோசகராக அருட்பணி R.H சகாயநாயகம் அடிகள் பணிபுரிந்து வருகின்றார். தூய மரியன்னை பேராலய பங்குத்தந்தை யாழ் மறைக்கோட்ட முதல்வர் போன்ற முதன்மைப் பணிகளுக்கு மத்தியிலும் மத்திய சபையின் செயற்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு தன்னுடைய ஆலோசனை வழிகாட்டலூடாக எமக்கு பக்க பலமாக இருந்து வருகின்றார். இவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பணி வாழ்வு சிறக்க இறையருள் வேண்டுகின்றோம்.

**பந்திகளின் ஆன்ம ஆலோசகர்கள்:**

பங்குத் தந்தையர்களே பந்திகளின் ஆன்ம ஆலோசகர்கள் ஆவர். இவர்களின் ஆலோசனைகளும் வழிகாட்டுதலும் கூட்ட வேளைகளில் இவர்களின் பிரசன்னமும் பந்திகள் தமது பணிகளில் சிறப்பாக செயற்பட பக்க பலமாக இருக்கின்றன. இவர்களுக்கு மகிழ்வோடு நன்றி கூறுவதோடு இவர்களின் பணிவாழ்வுக்காகவும் உடல் உள ஆன்மீக நலனுக்காகவும் இறையருள் வேண்டுகின்றோம்.

**கூட்டங்கள்:**

மத்திய சபையின் செயற்குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிறு காலை 10.30 மணிக்கு தூய மரியன்னை பேராலயக் கூட்டச் சாலையில் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு பந்திகளிலும் இருந்து மத்திய சபையின் செயற்குழுவுக்காக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

நடைபெற்ற கூட்டங்கள் - 10

உறுப்பினர் சராசரி வரவு - 13

**தேசிய சபை :**

இச்சபை கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்குகிறது. இச்சபையில் யாழ் மறைமாவட்ட சபையினைப் பிரதிநிதிப்படுத்தும் செயற்குழு உறுப்பினராக எமது சபையின் உபதலைவர் சகோ.சி .செலஸ்ரீன் செயற்பட்டு வருகின்றார்.. மாதாந்தம் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்திற்கு இவர் தவறாது சமூகமளித்து எமது சபையின் செயற்பாடுகளைத் தேசிய சபைக்கு விளக்குவதுடன், தேசிய சபையின் செயற்பாடுகளை எமக்கு அறியத்தந்து ஓர் இணைப்பாளராகச் சிறப்பாகச் செயலாற்றுகின்றார். இவ் அறிக்கைக்கு உட்பட்ட காலத்தில் இணைப்பு நிதி உட்பட பல்வேறு விதமான மனிதநேயப் பணிகளுக்காக தேசிய சபையினர் உதவி செய்துள்ளனர். இவ்வுதவிகளுக்காக தேசிய சபையினருக்கு மகிழ்வோடு நன்றி கூறுகின்றோம்.

**கடன் திட்டம்:**

பந்திகளின் நலன் கருதி ரூபா 50,000/= நிதி கடன்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பந்திகள் தமது அவசர தேவைகளுக்காக மத்திய சபையிடம் உதவி கோரும்போது இந் நிதியிலிருந்து கடனாக வழங்கப்படுகின்றது.

**கிளி/முல்லை மறைக்கோட்ட விஜயம்**

போரினால் மிக பாதிக்கப்பட்ட மீளக்குடியமர்ந்த கிளி/முல்லை மறைக்கோட்ட கிளிநொச்சி, புலோப்பளை, தர்மபுரம், விசுவமடு, போன்ற பங்குகளை ஆன்ம ஆலோசகருடன் இணைந்து மத்திய சபை செயற்குழு தரிசித்து அவர்களோடு அன்புடன் உறவாடி சில மனித நேய உதவிகளை மேற்கொண்டுள்ளோம்.

**மத்திய சபையின் பணிகள்:**

1. அங்கத்துவ பந்திகளின் வருடாந்தக் கூட்டங்களில் கலந்து ஆலோசனைகள் வழங்கி சிறப்பிக்கின்றமை.

2. பந்திகளின் வரவு, செலவு விபரங்களை மத்திய சபைக் கணக்காய்வுக் குழுஆய்வு செய்து அறிக்கை தயாரிக்க உதவியமை

3. பந்திகளின் உறுப்பினர்களின் மரணவீடுகளிற்குச் சென்று அவர்களின் துயரில் பங்கு கொண்டு ஆன்மசாந்தி வழிபாடுகள் நடாத்தி ஆறுதல் கூறியமை.

4. யாழ் போதனா வைத்தியசாலைச் சிற்றாலயத் திருவிழாவுக்கு சில பந்திகளின் அனுசரணையுடன் நிதி சேகரித்துக் கொடுத்தமையும், திருவிழா திருப்பலியில் பங்கு கொண்டமையும்.

5. தேசிய சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு, மத்திய சபையின் தலைமையில் பந்திகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து பங்குகொண்டமை.

6. மத்தியசபையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இறைபதமடைந்த ஆன்ம ஆலோசகர்கள் உறுப்பினர்கள், உபகாரிகள் மகிமை அங்கத்தவர்கள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கார்த்திகை மாதம் நாவாந்துறை தூய நீக்கிலார் தூய மரியாள் பந்திகளின் அனுசரணையுடன் தூய மரியாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தமை

7. புது வருட முதல் ஞாயிறன்று சபையின் செயற்குழு உறுப்பினர்கள் ஆயரை சந்தித்து வாழ்த்துக் கூறி உரையாடி அவரின் திருக்கர ஆசீரை பெற்றமை.

8. பொதுக் கூட்டங்களை நடத்தாத மற்றும் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளாத பந்திகளை மத்திய சபையின் செயற்குழு உறுப்பினர்கள் தரிசித்து உற்சாகப்படுத்தி ஊக்குவித்தமை.

9. புலோப்பளை, கிளிநொச்சி, தருமபுரம், கூழாமுறிப்பு ஆகிய பங்குகளில் மீளக்குடியமர்ந்த மாணவர்கள், விதவைகளுக்கு தேசிய சபையின் நிதியுதவியுடன் மத்திய சபையும் இணைந்து மனித நேய உதவிகளைப் புரிந்தமை.

10. குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவனுக்கு மாதாந்த கல்வி உதவி செய்தமை.

11. புனித திரேசாள் ஆலயத்தில் அனைத்து பந்தி உறுப்பினர்களும் கலந்துகொள்ளக்கூடியதான தவக்காலத் தியானத்தை ஒழுங்குபடுத்தி அருட்பணி.ம.வி.இ.ரவிச்சிந்திரன் அடிகளின் வழிநடத்தலில் எமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்தமை.

12. தேசியசபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற இணைப்பு நிதியை பந்திகளுக்கு பகிர்ந்து கொடுத்தமை.

13. செயற்குழு உறுப்பினர்கள் உண்டியல் மூலமும் மகிமை அங்கத்தவர் மூலமும் மத்தியசபையின் பிறரன்புப் பணிக்காக பங்களிப்பு செய்தமை.

14. வைத்தியசாலையில் கைவிடப்பட்ட நோயாளிகளுக்கு பந்திகளின் பங்களிப்புடன் மத்தியசபையும் இணைந்து நிதி உதவி புரிந்தமை

15. சிறைச்சாலையில் உதவியற்ற கைதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்கிக்கொடுத்தமை

16. தேசிய சபையிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதியில் பந்திகளுக்கு நுளம்பு வலை வாங்கிக்கொடுத்தமை.

17. நாவாந்துறையில் இடம்பெற்ற “கிறீஸ் பூத” அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய சபையில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி உதவியுடன் மத்தியசபையும் இணைந்து தூய நீக்கிலார், தூய மரியாள் பந்திகளுடாக உதவி வழங்கியமை

18. தேசிய சபையின் நிதி உதவியுடன் கிளி/முல்லை மறைக்கோட்ட வறிய மாணவர்கள் எட்டுப் பேருக்கு கல்விக்கான புலமைப்பரிசில் வழங்கியமை.

19. யாழ் மறைமாவட்ட வின்சென்ற் டி போல் பந்தி உறுப்பினர்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடிய விதத்தில் சின்னம் தயாரித்து வழங்கியமை.

20. தூய வின்சென்ற் டி போலின் திருவிழாவை ஒவ்வொரு பந்திகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் அனைவரும் ஒன்று கூடி தூய மரியன்னை பேராலயத்தில் நற்கருணை வழிபாட்டுடன் சிறப்பித்தமை.

## பந்திகளின் முதன்மைப் பணிகள்

யாழ் மறைமாவட்டத்தில் இயங்கும் அனைத்துப் பந்திகளும் ஆன்ம ஆலோசகர்களின் (பங்குத்தந்தை) நேரடிக் கண்காணிப்பிலும் வழிகாட்டலிலும் மத்திய சபையின் ஆலோசனைகளுடன் ஆன்மீக, பிறரன்புப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றன. திருச்சபையின் துயர் துடைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து இவை ஆற்றும் பிறரன்புப் பணிகள் பாராட்டப்பட வேண்டியதாகும். இறைமகன் இயேசுவுக்காகத் தங்களைத் தாழ்த்தி வறிய மக்களுக்காக இரந்து சேகரிக்கும் பொருட்களை இனங்கண்டு பகிர்ந்து கொடுக்கின்றனர்.

“கல்விக்கு முன்னுரிமை” என்பதைக் கருத்திற் கொண்டு அனைத்து பந்திகளும் வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும் ஆதரவற்ற அநாதைப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் வறிய நோயாளர்களுக்காக அனைத்துப் பந்திகளும் மத்திய சபையூடாக உதவி வழங்குவதோடு சிறைச்சாலைக் கைதிகளின் தேவைகளுக்கு உதவி வழங்குகின்றனர். அத்துடன் வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களை தரிசித்து

அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான உதவிகளையும் ஏனைய அத்தியாவசிய உதவிகளையும் மத்தியசபையுடன் இணைந்து மிகவும் பரிவுடன் செயற்படுத்துகின்றன. இவர்களின் செயற்பாட்டிற்காக அனைத்துப் பந்திகளையும் பாராட்டி நிற்கின்றோம்.

## மத்திய சபைக்கு நிதி கிடைக்கும் வழிகள்

1. தேசிய சபையிடம் இருந்து கிடைக்கப் பெற்ற நிதியும் ஏனைய விசேட நிதியுதவியும்
2. மத்திய சபைச் செயற்குழு உறுப்பினர்களின் உண்டியல் சேகரிப்பு
3. மகிமை அங்கத்தவர் அன்பளிப்பு
4. உபகாரிகள் அன்பளிப்பு
5. பந்திகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கல்வி, துவிச்சக்கரவண்டி, சிறைச்சாலை மருத்துவமனைக்கான உதவிகளும்,மற்றும் கடன் மீளளிப்பும், சந்தா, போன்றவையும்
6. உபவிதி புத்தக விற்பனை மூலம்
7. மாதாந்த செயற்குழுக் கூட்டம் மத்திய சபையின் வருடாந்தக் கூட்டம் ஆகியவற்றின்போது சேகரிக்கப்பட்ட இரகசியப்பை வரவு.
8. வங்கி வட்டி
9. நுளம்பு வலை மீளளிப்பு

## அனுதாபங்கள்:

தூய வின்சென்ற் டி போல் சபையில் தம்மை இணைத்து மத்திய சபையிலும் மற்றும் ஏனைய பந்திகளிலும் பணிபுரிந்து இறைபதமடைந்த ஆன்மாக்கள் சபையினூடாக பயனடைந்து இறைபதமடைந்த ஆன்மாக்கள் அனைத்தும் நிலைவாழ்வு பெற மன்றாடுகின்றோம். மேலும் யாரும் நினைவு கூராத ஆன்மாக்களுக்காகவும் மன்றாடுகின்றோம்.

அத்துடன் யாழ் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் பங்குத்தந்தையர்களாகவும் வின்சென்ற் டி போல் சபை பணியாற்றிய பங்குகளில் அதன் ஆன்ம ஆலோசகர்களாகவும் பணியாற்றி இறைபதம் அடைந்த அருட்பணி M.E. பயஸ், அருட்பணி பிரான்சிஸ் குலாஸ் (அ.ம.தி) அருட்பணி A.சகாயதாஸ் ஆகியோரின் பணிகளுக்காகவும், வழிகாட்டலுக்காகவும், நன்றி கூறுவதோடு அவர்களின் ஆன்ம இறைசந்நிதானத்தில் இன்புற்றிருக்க இறையருள் வேண்டுகின்றோம்.

## நன்றிகள்:

கடந்த வருடம் முழுவதும் நாம் சிறப்பாகச் செயற்படவும் பந்திகளை வழிநடத்தவும், எம்மோடு கூட இருந்த இறைவனுக்கு நன்றியோடு புகழ்பாடுகின்றோம். பந்திகளின் பாதுகாவலர்களாக விளங்கும் அனைத்துப் பந்திகளின் பெயர் கொண்ட சகல புனிதர்களுக்கும், ஏழைகளின் அன்பராம் தூய வின்சென்ற் டி போலுக்கும், சபையின் ஸ்தாபகர் அருளாளர் பிறெட்றிக் ஓசானம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது மறை மாவட்ட மத்திய சபையைத் தமது பந்தியுடன் இணைத்து நிதியுதவி புரிந்து வரும் நியூசிலாந்து "ட்றவுக்கி மாவட்ட சபை" யினருக்கும், கொழும்பு தேசிய சபையினருக்கும், எமது நன்றிகளை நவில்கின்றோம். எமது ஆயர் பேரருட்திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கும், குருமுதல்வர் அருட்பணி கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கும், பந்திகளை வழிநடத்தும் சகல பந்திகளின் ஆன்ம ஆலோசகர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இறையாசீரும் வேண்டுகின்றோம். மத்திய சபையின் கூட்டங்களிலும் பந்திகளின் கூட்டங்களிலும் கலந்து கொண்டு தமது ஆலோசனைகள் மூலம் எம்மை ஊக்குவிக்கும் மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.H. சகாயநாயகம் அடிகளாருக்கும் எமது நன்றிகளைக் கூறி இறையாசீர் வேண்டுகின்றோம். இறுதியாக மத்திய சபையின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் பந்திகளின் சகல உறுப்பினர்களுக்கும் எமது நன்றிகளைக் கூறி இவ்வாண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மத்திய சபை பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.

இவ்வண்ணம்
பிறரன்புப் பணியில்

**சகோ. R.A . அமலரட்ணம்**
தலைவர்

**சகோதரி.ஜோசப்பின் சர்வநாதன்**
செயலாளர்.

**அருட்பணி R.H. சகாயநாயகம்**
ஆன்ம ஆலோசகர்

# தூய வின்சென்ற்
# மத்திய சபை -
## 01-01-2011 தொடக்கம் 31-12-2011

| வரவு விபரம் | வங்கி ரூபா | வங்கி சதம் | காசு ரூபா | காசு சதம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 174 493 | 48 | 123 451 | 50 |
| வட்டி 2010 | 1 211 | 83 | | |
| வட்டி 2011 | 15 332 | 73 | | |
| **<u>தேசிய சபையிடமிருந்து</u>** | | | | |
| **இணைப்பு நிதி** | 503 026 | 65 | | |
| **மீளக்குடியமர்ந்தோர் உதவி (வன்னி)** | 206 500 | 00 | | |
| **புலமைப்பரிசில் (வன்னி)** | 62 222 | 00 | | |
| **அனர்த்த உதவி (நாவாந்துறை)** | 60 000 | 00 | | |
| **நுளம்புவலை அன்பளிப்பு** | 47 250 | 00 | | |
| **தியான உதவி** | 10 000 | 00 | | |
| வங்கியிலிருந்து பொருளாளரிடம் | | | 840 000 | 00 |
| உண்டியல் | | | 2 225 | 00 |
| கல்வியுதவி அன்பளிப்பு (பந்திகள்) | | | 9 000 | 00 |
| துவிச்சக்கரவண்டி உதவி (பந்திகள்) | | | 9 000 | 00 |
| வைத்தியசாலை உதவி (பந்திகள்) | | | 20 400 | 00 |
| கடன் மீளளிப்பு | | | 10 600 | 00 |
| சந்தா | | | 5 100 | 00 |
| புத்தக விற்பனை | | | 600 | 00 |
| இரகசியப்பை வரவு (மாதாந்த கூட்டம்) | | | 2 865 | 50 |
| மகிமை அங்கத்தவர் | | | 1 400 | 00 |
| உபகாரி | | | 1 000 | 00 |
| இரகசியப்பை வரவு (வருடாந்த கூட்டம்) | | | 1 045 | 00 |
| நுளம்பு வலை மீளளிப்பு | | | 32 000 | 00 |
| சிறைச்சாலை உதவி | | | 8 000 | 00 |
| | 1080 036 | 69 | 1066 687 | 00 |

| தொகுப்பு | வங்கி க/கு | காசு க/கு |
|---|---|---|
| மொத்த வரவு | 1080 036 69 | 1066 687.00 |
| மொத்த செலவு | 840 450 00 | 922 498.00 |
| மீதி | 239 586 69 | 144 189.00 |

சகோ.இ.அ. அமலரட்ணம்
தலைவர்

**அருட்பணி R.H. சகாயநாயகம்**
ஆன்ம ஆலோசகர்

டி போல் சபை

யாழ் மறை மாவட்டம்

வரையான வரவு செலவு அறிக்கை

| செலவு விபரம் | வங்கி ரூபா | வங்கி சதம் | காசு ரூபா | காசு சதம் |
|---|---|---|---|---|
| வங்கி மீளல் | 840 000 | 00 | | |
| வரி 2010 | 150 | 00 | | |
| வரி 2011 | 300 | 00 | | |
| மீளக் குடியமர்ந்தோர் உதவி | | | 203 876 | 00 |
| அச்சிடல் | | | 7 150 | 00 |
| கல்வியுதவி | | | 12 000 | 00 |
| உபசரணை (செயற்குழுக்கூட்டம்) | | | 3 920 | 00 |
| இணைப்பு நிதி (பந்திகளுக்கு) | | | 340 000 | 00 |
| தவக்காலதியானம் | | | 4 250 | 00 |
| சபைச்சின்னம் | | | 13 000 | 00 |
| உபசரணை (வருடாந்தக் கூட்டம்) | | | 9 480 | 00 |
| வைத்தியசாலை உதவி | | | 14 000 | 00 |
| சிறைச்சாலை உதவி | | | 21 000 | 00 |
| அனர்த்த உதவி (நாவாந்துறை) | | | 100 000 | 00 |
| உபசரணை (புனித வின்சென்ற் டி போல் தினம்) | | | 3 700 | 00 |
| புலமைப்பரிசில் (கல்வி) | | | 64 000 | 00 |
| போக்குவரத்து | | | 30 424 | 00 |
| நுளம்பு வலை | | | 95 600 | 00 |
| தபாற் செலவு | | | 98 | 00 |
| மொத்தச் செலவு | 840 450 | 00 | 922 498 | 00 |
| இறுதி மீதி 31 | 239 586 | 69 | 144 189 | 00 |
| | 10800 36 | 69 | 1066 687 | 00 |

## தொகுப்பு

| | |
|---|---|
| வங்கி மீதி | 239 586.69 |
| காசு மீதி | 144 189.00 |
| மொத்த மீதி | 383 775.69 |

2011ம் ஆண்டிற்கான தூய வின்சென்ற் டி போல் மத்திய சபையின் கணக்கேட்டையும் உறுதிச்சிட்டைகள், மற்றும் செலவுக்கான சிட்டைகள், வரவுச் சிட்டைகள் என்பவற்றை ஒப்பிட்டு சரியெனக் கண்டுகொண்டேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்

சகோ.பி.பி. பிறின்ஸ்
கணக்கு பார்வையாளர்

சகோ.S. ஜெயக்குமார்
பொருளாளர்

Jeya Printers 100 4th Cross Street,Jaffna.